

துளி தேன்

இராதா மணாளன்

துளி தேன்

கே. ஜி. இராதாமணாளன்

அறிவுப் பண்ணை

6, மங்கம்மாள் தெரு — சென்னை 1.

முதற்பதிப்பு ஆகஸ்ட் 1949

விலை 8 அணு

மூர்த்தி பிரிண்டிங் ஒர்க்ஸ், சென்னை-1

கதைகளைக் குறித்து

வாழ்வு என்னும் பொற் குடத்திலுள்ள இன்பமென்னும் மலைத் தேன் முழுவதையும் குடித்து ஆசை தீர, ஒரு வாலிபன் பணம் படைத்த நிலையிலும், ஏழ்மை வாட்டிய நேரத்திலும் விரும்புகிறான். வாழ்க்கைப் புயலில் சிக்கிய அவனால், குடத்தேனில் சொட்டுதேன் மட்டுந்தான் பருக இயலுகிறது. இதுதான் **துளி தேன்**!

பணமும் அந்தஸ்தும் கொண்ட முதலாளி ஒருவன், ஒரு ஏழையை பணத்திற்கு அடிமை யாக்குகிறான். சிறுத்தை யிடத்தில் சிக்கிய மாடு எப்படியும் தப்ப முடியாததைப் போல, நெஞ்சிரக்கமற்றவனிடம் அகப்பட்டுக் கொண்ட ஏழை, தன் காதலியைப் போய் பார்க்கவும் அனுமதி கிடைக்காமல் எந்நேரமும் அவள் நினைவாகவே வாடுகிறான். எனினும் இரவென்றும் பகலென்றும் பாராது பச்சை இரத்தம் பரிமாறிக்கொண்டே இருக்கிறான். மாண்ட தன் உயிர் போன்றாளின் உடலைப் போய் பார்க்க, ஊருக்குச் செல்ல வேண்டுமென்று ஆணவக் காரனிடம் கெஞ்சி மன்றாடுகிறான். பணமூட்டை அவன் மீது சீறி விழுந்து செல்லக் கூடாதென்று உத்தரவிடுகிறான். இரத்த வெறி பிடித்த முதலாளியின் புலியுள்ளம் நாளா வட்டத்தில், அன்பும் கடமை உணர்ச்சியும் நிறைந்த ஏழையின் உள்ளத்தைச் சிறிது சிறிதாக மாற்றிக்

கொண்டே வருகிறது. முடிவில் ஏழையும் பொறுகிறுன் புலியுள்ளம்!

பெரிய இடத்து மகனும் மகளும் உல்லாசத்திற்காக காதல் விளையாட்டில் ஈடுபடுகிருர்கள். மகன் ஏழைப் பெண்ணொருத்தியைத் தாயாக்குகிறுன்! மகள், காளை ஒருவனுல் அன்னை யாக்கப் படுகிருள்! இவ்வளவும் திரை மறைவில் நடைபெறுகிறது! உலக மேடையில் குடும்ப நிலைக்குத் தகுந்தாற்போல் திருமணம் செய்துகொண்டு அவர்கள் உலவுகிருர்கள். ஏழைப் பெண்ணின் வாழ் நாட்களில் துன்பத்தைத் துணை யாக்குகிறது, அவ்விருவரின் துரோகம்!

கதைகளைக் குறித்து தெளிவு உண்டாக்குவது என் வேலை—செய்துவிட்டேன்! அவற்றிலுள்ள கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு!

என் சிறு கதைகளைத் திரட்டி சிறு நூலாக்கிய அறிவுப் பண்ணை அமைச்சர் அவர்களுக்கு என் நன்றி.

சென்னை
10—4—1949

அன்பன்,

இராதாமணாளன்

: துளி தேன் :

"நீல வானத்தில் ஒளிமுகம் காட்டி ஒய்யாரமாகச் செல்லும் நிலாவைக் கண்டு, கடல் களிப்பினால் பொங்கி யெழுகிறான்! மதியும் மகிழ்கிறாள்! இருவரும் காதலால் கட்டுண்டு இருக்கிறார்கள்! சந்திரனைச் சமுத்திரம் சந்தித்துப் பேச முடியாது! கட்டித் தழுவ முடியாது! முத்தமும் பெற முடியாது! மதியினாலும் கீழே வந்து தன் காதலனுக்கு மகிழ்ச்சியைத் தர முடியாது! இருப்பினும் ஒருவரை ஒருவர் கண்டு கண்டு இன்பத்தில் திளைக்கிறார்கள்; ஆனந்தத்தால் கூத்தாடுகிறார்கள்!......காதலர் கைப்பற்ற முடியுமா? காதல் வெற்றி யடையுமா? முடியாது! முடியவே முடியாது!......சாந்தா—மதி; நான்—கடல்; பார்க்கிறாள்: புன்னகை புரிகிறாள்! என் உள்ளத்தில் தேன் கசியச் செய்கிறாள்! பயன்? மதியும் கடலும், மனைவியும் கணவனுமாக இயலாது! சாந்தாவும் நானும்......!"

படுக்கையில் படுத்துக்கொண்டு புரண்டுகொண்டிருந்த சுந்தரத்தின் உள்ளத்தில் உருண்டுகொண்டிருந்த எண்ணங்கள் இவை! அவனது மனக் கண்முன் பற்பல காட்சிகள் தோன்றித் தோன்றி மறைந்தன. மாலா—அவன் பழைய காதலி—நீர் சிந்தும் கண்களோடு எதிரில்

தோன்றினுள். சுந்தரம் தன் கண்களைத் துடைத்துக் கொண்டான். அவனை அன்பும் ஆசையும் ஊட்டி வளர்த்த அருமைப் பெற்றோர்கள் எதிரே தோற்றமளித்தனர்! "அம்மா! அம்மா! அப்பா!" அவன் வாய் முணுமுணுத்தது; குரல் தேம்பியது! கண்கள் ஆற்றின் ஊற்ருயின! இதயம் துன்ப மேகங்கள் கப்பியதால் இருண்டது! மேகங்களுக் கிடையே மின்னலைப் போலத் தோன்றி மறைந்தது சாந்தாவின் இன்ப முகம்!

* * *

சிங்கப்பூரில் பெருத்த பணக்காரர் சிங்காரவேலு. அவரும் அவரது மனைவியும் தங்களது ஒரே மகனை சுந்தரத்தைக் கண்ணைப் போல் நினைத்து, உயிரைப் போல் நேசித்து வளர்த்து வந்தார்கள். சுந்தரமும் வளமாக வளர்ந்து, கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தான்.

சுந்தரம் சிறிது மாநிறமாக இருந்தாலும், பார்ப்பதற்கு நல்ல அழகாகவே யிருந்தான். கட்டான உடல்! கவலையை அறியாத உள்ளம்! கலக்கமற்ற குணம்! அன்போடு பேசும் தன்மை! ஆகிய இவ்வளவு நற்குணங்களும் அவனிடம் தவழ்ந்து விளையாடின.

மாலா சுந்தரத்தின் கல்லூரித் தோழி. மாலா மதிமுகத்தாள்! மாசற்ற குணத்தாள்! சுந்தரத்தின் தந்தையும் மாலாவின் தந்தையும் நெருங்கிப் பழகும் தோழர்கள். இவ்விரு தோழர்களின் மகனும் மகளும் அன்போடு பழகியதில் அதிசய மொன்றுமில்லை.

மாலாவும் சுந்தரமும் கல்லூரிக்குச் செல்வதானுலும், மாலையில் உலாவச் செல்வதானுலும், நாடகமோ சினிமாவோ பார்க்கச் செல்வதானுலும் ஒன்ருகவே செல்வார்கள். பெற்றோர்களும், அவர்களது அன்பையும் காதலையும் அறியாமலில்லை. தெரிந்தும் காதலைக் கண்டிக்கவில்லை.

காரணம் மாலாவையும் சுந்தரத்தையும் கல்யாணமென்ற தங்கச் சங்கிலியினுல் கட்ட அவர்களுக்கு யாதொரு தடையுமில்லை. அவர்களது நீண்ட நாள் ஆசையும் அது தான். ஆசை தானுகவே நிறைவேறுவதைக் காண்போர் ஆத்திரமா அடைவர், அகமகிழ்வுதானே கொள்வர்?

ஒரு நாள் மாலை, சுந்தரத்தின் பெற்ருேர்கள் புதிய நாடகமொன்றைப் பார்க்கச் சென்றுவிட்டார்கள். ஆகவே காதலர் வெளியே உலாவச் செல்வதை நிறுத்திக்கொண்டு, வீட்டிலேயே தங்கி, பொங்கி வழியும் காதல் பேச்சில் ஈடுபட்டார்கள்.

மாலா அழகிய மலர்! மலரின் அழகிலே சொக்கிய வண்டு, சுந்தரம்! வீடே பூஞ்சோலை! வண்டு மலரைச் சுற்றிச் சுற்றி வட்ட மிட்டது! இன்பமாக வீசிய தென்றலினுல் மலர் சாய்ந்து சாய்ந்து கொடுத்தது! வண்டு, மலரிலிருந்த தேனைப் பருகிக் களிப்பில் ஆழ்ந்தது.

"மாலா!"

"அத்தான்!"

"வாழ்க்கையின் இன்பம்......"

"தேனைப் போலத்தான்......"

உண்மைதான் மாலா! வாழ்க்கை என்பதே இன்பத் தேன் குடம்! நாம் சுவைத்தது அதிலே துளி தேன்!"

"துளி தேன்!" என்ருள் நாணத்தோடு!

இருவரும் சிரித்தார்கள்!

நாட்கள், மாதங்கள், ஆண்டுகள் உருண்டன! உலகப் போரின் காரணமாக, ஜப்பானியரின் நாட்டம் சிங்கப்பூரின் மீது விழுந்தது. அழகிய நகரம் தாக்குண்டது! விமானப்

படை யெடுப்பு! மக்கள் கோவெனக் கதறினார்கள்! பதறினார்கள்! வெளியூர்களுக்கு ஓடினார்கள்! குண்டுகள் சரமாரியாக விழுந்தன.

சுந்தரத்தின் பெற்றோர்கள் குண்டுக்குப் பலியானார்கள்! பைத்தியக்காரனைப் போல இங்குமங்கும் ஓடினான் சுந்தரம்! மாலாவின் கதி என்ன ஆயிற்று என்றே அவனுக்குத் தெரியவில்லை! மாலாவின் வீடு தரைமட்டமாக இருந்ததைக் கண்டு திடுக்கிட்டான்! அழுதான்! கதறினான்! தனியாகக் கப்பலேறிச் சென்னை வந்தடைந்தான்.

பணக்காரன் மகன், பட்டணத்தில் பராரியாகச் சுற்றினான். சர்க்கார் சிறிது உதவி யளித்தார்கள். சில மாதங்களில் ஒரு பள்ளியில் ஆசிரியராக அமர்ந்தான். அவன் பெற்று வந்த சிறிய ஊதியம் அவன் வாழ்க்கைச் செலவிற்கே போதவில்லை. ஆகவே வக்கீல் வைத்தியநாதர் வீட்டில், அவர் மகன் சண்முகத்திற்கு மாலையில் பாடம் சொல்லிக்கொடுத்துக் கொண் டிருந்தான்.

வைத்தியநாதர், தன் மகனைப் போலவே சுந்தரத்தை அன்பாக நடத்தி வந்தார். சுந்தரம் வக்கீல் வீடிருந்த அதே வட்டாரத்தில் ஒரு தனி அறையில் இருந்தான். அதே அறையில் வேணு என்ற கல்லூரி மாணவனு மிருந்தான், வேணு சுந்தரத்திடம் அன்புடனே பழகி வந்தான். நாட்கள் செல்லச் செல்ல இவ் விருவரும் நெருங்கிய தோழர்களானார்கள்.

வைத்தியநாதரின் மகள் சாந்தா! சுந்தரம் சண்முகத்திற்குப் பாடம் சொல்லித்தரும் நேரங்களில் சாந்தா ஒளிந்திருந்து அவனைப் பார்ப்பது வழக்கம். நாட்கள் பல மறைந்தன. சாந்தாவின் உள்ளத்திலிருந்த நாணமும் மறைந்தது.

சுந்தரம் பாடம் கற்றுக்கொடுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் அடிக்கடி அப் பக்கம் சாந்தா வருவாள், நிற்பாள், போவாள். இது வழக்கமாயிற்று.

சாந்தாவின் நடை, அவள் வீச்சும் கண் பார்வை, அவள் சிந்தும் மொழிகள் இவற்றிலெல்லா மிருந்து அவள் தன்னைக் காதலிக்கிறாள் என்ற உண்மையைச் சுந்தரம் அறிந்து கொண்டானே ஒழிய, அந்த ஆசையை வளர்க்கவோ அன்றிப் பூர்த்தி செய்யவோ அவன் விரும்பவில்லை. அவன் உள்ளத்தில் நிலைத்திருந்த மாலாவின் உருவமே அதற்குக் காரணம்.

இந்த மனநிலையில் ஓராண்டு ஓடி ஒளிந்தது. சுந்தரத்தின் இதயத்திலும் சிறிது சிறிதாகச் சாந்தா ஓடி ஒளிய ஆரம்பித்தாள்.

சாந்தா நாளாவட்டத்தில் அவன் உள்ளத்தில் நர்த்தனமாடத் தொடங்கினாள். மாலாவின் உருவம் அவன் இதயச் சுவரில் ஒட்டிக் கொண்டிருந்த பழைய சித்திரமாயிற்று.

அவளைக் காதலிக்கவே கூடாதென்று திடச் சித்தம் கொண்டிருந்தவன், "சாந்தா, பணக்காரப் பெண். ஏழ்மை உடை நம் உடலைப் போர்த்திருக்கும் காலமிது! காதலித்துப் பயன்?" என்று எண்ணத் தொடங்கினான்.

சாந்தா மாலை நேரங்களில், வீட்டின் வாயிற்படியில் சுந்தரத்தின் வருகைக்காகக் காத்திருப்பாள். அவன் வருவதைக் கண்டதும் புன்னகையோடு வரவேற்பாள். சொக்கவைக்கும் கண்ணொளியும், குளிர்ந்த புன்னகையும், அவன் இதயத்திலிருந்த காதல் மணியைத் தட்டி, ஒலி யெழுப்பச் செய்தன.

ஒரு நாள் மாலை சோவென்று கனத்த மழை பெய்து கொண்டே யிருந்தது. அதனால் சுந்தரம் தன் அறைக்குச்

செல்ல முடியாமல் சாந்தாவின் வீட்டிலேயே தங்க நேர்ந்தது. அங்கேயே சாப்பிட்டு விட்டு, சண்முகத்திற்குப் பாடம் சொல்லித் தரும் அறையிலேயே படுத்துக் கொண்டான். மாடியில் கட்டிலில் படுத்துக் கொண் டிருந்தாள் சாந்தா. அவளுக்குத் தூக்கமே வரவில்லை. தன் வீட்டிலேயே காதலன் தனியாகப் படுத்திருக்கும் போது, அவள் உடலும் உள்ளமும், எப்படிச் சும்மா யிருக்க முடியும்! மெதுவாக எழுந்து பார்த்தாள். அடுத்த அறையில் தன் தகப்பனார் சட்ட புஸ்தகங்களைப் புரட்டிக் கொண்டிருந்தார்.

மணி பன்னிரண்டு அடித்தது. ஊரெல்லாம் அமைதியில் ஆழ்ந்திருக்கும்பொழுது தன் தகப்பனார் மட்டும் விழித்துக் கொண்டிருந்தது அவளுக்குப் பொல்லாத கோபத்தை உண்டாக்கியது. இரண்டடித்தது மணி. இன்னும் தகப்பனார் விளக்கை அணைத்து விட்டுப் படுக்கவில்லை என்பதை அறிந்ததும் நேரே போய்த் தன் தந்தையைத் திட்டலாமா என்று கூட அவளுக்குத் தோன்றியது! அந்த நேரத்தில் அவரை, அவள் வெறுத்தது போல் அவள் வாழ்நாளில் என்றுமே வெறுத்ததில்லை. மணி மூன்று அடிப்பதற்குள் தந்தை படுத்துக் கொண்டார்.

சாந்தாவின் மனம் சிறிது சாந்தமாயிற்று. திரும்பவும் கோபம் ஆரம்பமாயிற்று. "படுத்தார், ஏதோ யோசிக்கிறார் போல இருக்கிறது......இன்னும குறட்டை விடவில்லை" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள்.

';சாந்தா! இனி உன் வேலையை ஆரம்பிக்கலாம், கண்ணே" என்று கூறுவதைப் போல விட்டுவிட்டுச் சங்கு பிடித்தது குறட்டை.

ஓசையின்றி எழுந்தாள். வழுக்குத் தரையில் நடப்பவளைப் போல, மிகவும் ஜாக்கிரதையாகவும், மெதுவாகவும்

நகர்ந்தாள். ஒவ்வொரு படியாகக் கடந்து கீழே வந்தாள், பத்து மைல் ஓடி வந்தவளைப் போல அவளுக்குப் பெருமூச்சு வாங்கியது. அவள் நரம்புகள் அனைத்தும் ஏதோ ஓர் உணர்ச்சியினால் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

சுந்தரம் படுத்திருந்த அறையின் கதவை மெதுவாகத் திறந்தாள். குடும்ப மதிப்பு, செல்வம் சகலவற்றையும் மறந்தாள். படுக்கையின் அருகே உட்கார்ந்தாள். மெதுவாகத் தன் மலர்க் கரத்தைத் தூக்கி, அவன் முகத்தருகே எடுத்துச் சென்றாள்! விரல்களின் முனைகளை, இதயம், நாணமென்னும் தராட்டினால் பற்றி யிழுத்தது. தலையணையின் மேல் விரல்களை வைத்தாள். தலையணை ஈரமாயிருப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள். "தலையணை ஏன் ஈரமாயிற்று? ஒருவேளை அழுதிருப்பாரோ? என்ன குறையை எண்ணி அழுதாரோ, பாவம்!" என்ற எண்ணங்கள் அவள் உள்ளத்தில் எழ ஆரம்பித்தன. இருட்டில் தன் கண்களை அகல விரித்து சுந்தரத்தின் முகத்தை உற்று நோக்கினாள். தலையணையில் இருந்த விரல்களை மெதுவாக எடுக்கும் பொழுது அவன் கன்னத்தில் ஒரு விரல் பட்டுவிட்டது. மலர் போன்ற குளிர்ந்த விரல் பட்டதும் தூங்கியும் தூங்கா திருந்த சுந்தரம் மெல்லத் தன் கண்களைத் திறந்தான். அறையில் மல்லிகை மலரின் மணம வீசுவதை நுகர்ந்ததும் அவனுக்கு வியப்பாக இருக்கவே, தலையைத் தூக்கிப் பார்த்தான்.

தன்னருகே யாரோ உட்கார்ந்திருப்பதைக் கண்டதும், அவன் உள்ளம் சிறிது தூக்கிப் போட்டது.

"யாரது?" என்று மெதுவாகக் கேட்டான்.

"நான் தான், அத்தான்!" நாணம் கலந்த குரலில் இவ்வார்த்தைகள் ஒலித்தன.

சுந்தரம் எழுந்து உட்கார்ந்தான். வளையல் ஓசையைக் கேட்டதும், மனம், ஆகாய விமானத்தில் பறப்பது போல அவனுக்குத் தோன்றியது.

“இந்நேரத்தில் நம்மை இங்கு யாராவது கண்டு விட்டால்?” என்று பேச்சை ஆரம்பித்தான்.

“பேசாதீர்கள்! பொழுது விடியப்போகும் நேரம்” என்று கூறி அவன் வாயைப் பொத்தினாள்.

அவள் மிருதுவான கைப் பட்டதும் அவன் உள்ளத்தில் பற்பல உணர்ச்சிகள் தோன்ற ஆரம்பித்தன.

அறையில் அமைதி தவழ்ந்தது.

சுந்தரமும் சாந்தாவும் காதலென்னும் குதிரையின் மேலேறி, இன்ப . மென்னும் காற்றில் சுற்ற ஆரம்பித்தனர்.

“அத்தான்?......”

“என்ன சாந்தா?”

“நான் வரட்டுமா?”

“உலகமெப்படி யிருக்கிறது?”

“தேன் போல் தித்திக்கிறது!” என்று மெதுவாகக் கூறி, அவன் தோள்களைத் தடவிக் கொடுத்தாள்.

சுந்தரத்தின் எண்ணம் கடல் கடந்து ஓட ஆரம்பித்தது! முத்து முத்தாக அவன் கண்களில் நீர் ததத்தளித்தது.

“துளி தேன்!” அவனது உலர்ந்த உதடுகளை நீக்கிக் கொண்டு இவ்வார்த்தைகள் வெளியே ஓடி வந்தன.

இருட்டானதால் அவன் முகத்தில் வழிந்த கண்ணீரை அவளால் காண முடியவில்லை.

திடீரென்று மேளச் சப்தம் கேட்டது. சாந்தா எழுந்தாள்.

"உட்கார் சாந்தா போகலாம்"

"சிறிது நேரத்தில் பொழுது புலரப் போகிறது!"

"யார் வீட்டில் மேளம் அடிக்கிறார்கள்?"

"கோடி வீட்டு, தாடி முதலியார் மகளுக்குக் கல்யாணம்!......நமக்கெப்போது இப்படி மேளம்......"

"சாந்தா! இது மங்கள வாத்தியமென்று எண்ணுகிறாய்! உற்றுக் கேள் அந்த ஓசையை!"

"கல்யாணம்! கல்யாணம்! என்று பாடுகிறது, அத்தான்!"

"சேச்சே! அப்படி அல்ல! இவர்கள் சாகப்போகிறார்கள், சாகப் போகிறார்கள் என்று தானே அது ஒலமிடுகிறது!" என்று துக்கம் கலந்த குரலில் கூறினான்.

"போங்கள்! இன்பமாக இருக்கிற நேரத்தில் துன்பமான பேச்சுத் தான் உங்களுக்குப் பேசத் தெரியும்" என்று கூறி, ஒரு முத்தம் தந்துவிட்டு மான் போல் அறையை விட்டுத் துள்ளிக் குதித் தோடினாள்.

* * *

நாட்கள் ஓடின. ஒரு நாள் சுந்தரம் தன் அறையில் படுத்துக்கொண்டு சாந்தாவைக் குறித்து நினைத்துக் கொண்டிருந்தான்.

"சுந்தரம்?"

"என்ன வேணு?"

"என்னப்பா, வரவர ஊமையாகிக்கொண்டே போகிறாய்? அதற்கு முன்பெல்லாம் கல கல வென்று பேசிக்கொண்டிருப்பாய்! கொஞ்சம் நாளாக எப்போது பார்த்தாலும் ஏதோ யோசனை செய்து கொண்டே இருக்கிறாய் ?"

"ஒன்றுமில்லை வேணு! மேலே இருக்கிறது பார், கூரை. அது கீழே உள்ள தரையைக் காதலிக்கிறது. தரையும் கூரையைக் காதலிக்கிறது? கூரையும் தரையும் ஒன்றாகச் சேரமுடியுமா?

"ஏன் சேர முடியாது?"

"எப்படி?"

"நான்கு பக்கங்களிலுமுள்ள சுவர்களை இடித்துவிட்டால் கூரையும் தரையும் ஒன்றாகிவிடுகின்றன" என்றுகூறிவிட்டு, வேணு வெளியே சென்று விட்டான்.

"நான்கு பக்கங்களிலுமுள்ள சுவர்களை இடித்துவிட்டால்......" இவ்வார்த்தைகள் அவன் உள்ளத்தை மிக மிகக் கவர்ந்தன.

"ஆமாம்; சுவர்களை இடிக்கத்தான் வேண்டும். சமுதாயத்திலுள்ள சட்டம்,பழைய வழக்கங்கள், அறியாமை, உயர்வு தாழ்வு ஆகிய நான்கு சுவர்களையும் இடித்துவிட்டால் சாந்தாவும் நானும் ஒரே எடையில் நிற்போம் அதுதான் வழி!!"

எண்ணினான் இப்படி! புது வழியைக் கண்டு விட்டவனைப்போல ஆறுதலும் ஆனந்தமும் அடைந்தான்.

* * *

வழக்கப்படி மாலை ஒரு நாள் வக்கில் வீட்டில் பையனுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தான். சண்முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த அவன் கண்கள் வளையல் ஒலியைக் கேட்டதும் சாந்தாவின் முகத்தைப்

பார்க்கத் திரும்பின. அறையின் வெளியே கலங்கிய கண் களோடு கன்னி நின்றிருப்பதைக் கண்டதும் அவன் மனம் திடுக்கிட்டது.

சண்முகத்தை அனுப்பிவிட்டு, சாந்தாவை உள்ளே வரும்படி அழைத்தான். கால்கள் தள்ளாட உள்ளே வந்தாள் சாந்தா.

வந்தவள், தனக்கு மணம்முடிக்கப் பெற்றோர்கள் நிச்சயித்து விட்டார்களென்றும், எவ்வளவோ மன்றாடிப் பார்த்தும் அம்மணத்தை நிறுத்த முடியவில்லையென்றும் அழுது கொண்டே கூறினாள் சாந்தா.

"நாம் இப்பொழுது என்ன செய்யலாம் அத்தான்?" என்று அவன் கண்களைப் பார்த்துக்கொண்டே வினவினாள் இளம் பெண்.

"வழியா?"

"ஆமாம்!"

சுந்தரத்திற்கு ஒன்றுமே புரியவில்லை. கண்ணீர் வடியும் மங்கையின் அழகிய முகத்தைக் கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சந்திக்கலாம் என்று கூறி விட்டுச் சுந்தரம் தன் அறைக்குத் துக்கம் நிறைந்த இதயத்தோடு திரும்பினான்.

* * *

"நாம் ஏன் இனியும் வாழவேண்டும்? உலகில் எது நமக்குச் சொந்தமாயிருக்கிறது? அம்மா, அப்பா, இறந் தார்கள்! பொருளும் மறைந்தது. ஏழையும் ஆனேன். ஆருயிர் மாலாவும் இல்லை. நான் இன்னும் சாகாமல் ஏன் இருக் கிறேன்? உடைந்த உள்ளத்தை ஒன்றாக்க முயன்ற சாந்தா வையும் சமுதாயம் பிரிக்கிறது. இதன் பிறகும் நான் வாழ வேண்டுமா? உயிரோடு இருந்து இனியும் வருத்தத்தைச்

சுவைத்துக்கொண்டே இருக்கவேண்டுமா ? வாழத்தகாது! வாழக்கூடாது! வாழப் பிறந்தவனல்ல நான் !......ஆமாம் நிச்சயம் அப்படியே செய்வேன்! உலகத்திலுள்ள ஒரே வழி அதுதான் எனக்கு! சமுதாயம் எனக்குத் தரும் பரிசு அது!......'' இப்படி யெல்லாம் எண்ணி யெண்ணி ஒரு முடிவிற்கு வந்துவிட்டான் சுந்தரம்.

நாளை,மணப்பெண் சாந்தாவை ஊர்வலமாக அழைத்து வரப் போகிறார் -என்பைத் அறிந்ததும் அன்றிரவே அவளைச் சந்தித்துத் தன்முடிவைக் கூறத் தீர்மானித்தான்.

* * *

"விஷமா?''

"ஆமாம் சாந்தா? நான் பிறந்த சமுதாயம் எனக்களிக்கும் வெகுமதி.''

"வேறு வழியில்லையா அத்தான்?''

"கிடையவே கிடையாது சாந்தா!......கண்ணே! நீ சுகமாக வாழ்ந்திரு! அதுவே எனக்குப்போதும்! நான் பிரிகிறேன்......''

"என்னை வாரியணைத்து முத்தம்தந்து இன்பத்தில் ஆழ்த்திய தாங்களா இவ்வார்த்தைகளைக் கூறுகிறீர்கள்? தாங்கள் சென்று நான் வாழ்வதா? கண்ணிழந்தும் உயிருடனிருப்பதா? எனக்கும் கொடுங்கள்!'

"விஷத்தையா?!''

"ஆமாம்!''

"வேண்டாம் சாந்தா!''

"தடைசெய்யாதீர்கள், அத்தான்''

"அப்படியானல் நாளைக் காலை நாமிருவரும் பிணங்களா?''

"பிணங்களல்ல, விடுதலைபெற்ற உடல்கள்!"

சுந்தரம், தான் கொண்டுவந்திருந்த விஷத்தில் கொஞ்சம் சாந்தாவிற்குக் கொடுத்துவிட்டு, அவளுக்குக் கடைசி முத்தம் தந்தும், அவளிடம் கடைசி முத்தம் பெற்றும் தன் அறைக்குச் சென்றான்.

விஷத்தை எடுத்துக் கொண்டு சாந்தா மாடியிலிருந்த தன் அறைக்குச் சென்றாள்; சாவதென்று தீர்மானித்தாள். ஆனால் இரவு நேரம் செல்லச் செல்ல அந்த உறுதி குறைய ஆரம்பித்தது.

கண்ணாடியில் தன் முகத்தைப் பார்த்தாள். "இவ்வளவு அழகாக இருக்கும் நான்-ஏன் சாகவேண்டும்! சுந்தரமும் சாவது என்ன நிச்சயம்? அவனென்ன ஏழைதானே, இறந்தாலும் இறப்பான்!" இப்படி எண்ணிக்கொண்டே மாடியின் முன்புறத்திற்கு வந்தாள். வானத்தில் முழு நிலவு ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. கீழே குனிந்து பார்த்தாள். தோட்டத்தில் நின்று கொண்டிருந்த புதிய 'கார்' மின்னிக் கொண்டிருந்தது.

"ஆகா! நமக்குக் காரென்ன, அழகிய பங்களா என்ன, இவற்றை எல்லாம் இழந்து விடுவதா?"

துரோகி! உன் காதலன் இறக்கும் பொழுது நீ மட்டும் உயிரோடு இருப்பது சரியா?" என்று அவள் உள்ளத்தின் ஒரு மூலையிலிருந்து மெல்லிய குரலில் யாரோ பேசுவது போல அவளுக்குக் கேட்டது.

"காதல்?" என்று கூறிச் சிரித்தாள்.

* * *

மறுநாள் கதிரவன் உதயமானான்! வேறு படுக்கையிலிருந்து எழுந்தான். தன் அருகே படுத்திருந்த சுந்தரம்

அறையின் ஒரு பக்கத்தில் பிணமாகிக் கிடந்ததைக் கண்டதும் திடுக்கிட்டு அலறினான்! மாண்ட சுந்தரத்தின் அருகே ஒரு கடிதமிருக்கக் கண்டதும், தன் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு படிக்க ஆரம்பித்தான்.

அன்புள்ள வேணு,

நான் உன்னிடம் யாதொரு செய்தியையும் கூறாமல் மறைத்து வைத்திருந்ததற்காக என்னைத் தாங்கள் மன்னிப்பீர்க ளென்று நம்புகிறேன். வைத்தியநாதர் மகள் சாந்தாவை நான் காதலித்தேன். அவளும் காதலித்தாள். ஆனால் சமுதாயம் எங்களை வெட்டித் தனித் தனியாக்கியது. நாங்கள் விஷ மருந்திச் சாகத் தீர்மானித்தோம். அதன் விளைவுதான் இது! மன்னிக்கவும்.

உன் தோழன்,
சுந்தரம்.

கடிதத்தைப் படித்து முடித்ததும், சாந்தாவின் வீட்டிற்கு ஓடினான். வக்கில் வீட்டில் யாரும் செத்ததாகவே தெரியவில்லை. கல்யாண மேளம் ஒலித்துக்கொண்டிருந்தது. வேணுவுக்குக் கோபமும் துக்கமும் பொங்கிக் கொண்டு வந்தது.

“காதகி! காதலியைப் போல் நடித்து என் தோழனின் உயிரைப் போக்கிய பாதகி! உனக்கு நல்ல பாடம் கற்பிக்கிறேன்” என்று முணு முணுத்துக் கொண்டே, போலீஸ் அதிகாரியின் மகனான தன் தோழன் கேசவனிடம் சென்று செய்தியைத் தெரிவித்தான். யாதொரு தடையு மின்றிப் பிணமெடுக்க ஏற்பாடுகள் செய்து தந்தான் கேசவன்.

* * *

விளக்கு வைக்கும் நேரம்! அலங்கரிக்கப்பட்ட காரில் மணமகள் சாந்தாவை ஊர்வலமாக அழைத்துக் கொண்டு வந்தனர். இனிமையான வாத்தியங்களின் இசை! வரிசை வரிசையாகப் பக்கவாட்டில் வந்து கொண்டிருந்த பிரகாசமான விளக்குகளின் ஒளி! சுற்றிலு முள்ளவர் களின் முகங்களில் ஆனந்தம் வழிந்து கொண்டிருந்தது.

சாந்தாவின் கழுத்தில் கனமான ரோஜா மாலை தொங்கிக் கொண்டிருந்தது. ரோஜா மலரிலிருந்த தேனைக் குடிக்க ஒரு தேனீ பறந்து வந்தது! தேனீயைக் கண்ட தும் மலர்ந்திருந்த சாந்தாவின் முகம் வாட ஆரம்பித்தது. சுந்தரத்தோடு கழித்த இன்ப இரவு அவள் மனக் கண் முன் தோன்றியது. "துளி தேன்! துளி தேன்!" அவள் காதுகளில் வந்தொலித்தன இவ் வார்த்தைகள்!

எதிரே ஒரு விளக்கு வரிசை வருவதைக் கண்டதும், சாந்தா தன் அருகே இருந்தவளிடம், "அதென்ன ஊர் வலம்?" என்று கேட்டாள்.

"உங்கள் வீட்டி லிருந்த வாத்தியார் இரவு செத்து விட்டாராம்?" என்று பதிலளித்தாள் அவள்.

இதைக் கேட்டதும், மேளங்களின் சப்தம், "சாகப் போகிறாய்!" என்று அவள் காதுகளில் ஒலித்தது! அவள் தலை சுற்றியது! இதயம் பட பட வென்று அதி வேகமாக அடித்துக் கொண்டது.

"துளி தேன்! துளிதேன்!" இவ் வார்த்தைகள் அவள் மூளையைக் குழப்பின; பின்புறமாகச் சாய்ந்தாள்; மயக்கமுற்றாள்.

ஊர்வலம் குழப்பத்தில் முடிந்தது. ஆரம்பத்திலேயே அவசகுனமாகி விடவே திருமணம் ஒத்திவைக்கப்பட் டது.

இரவு நடு நிசி; அறையில் குழம்பிய உள்ளத்தோடு உட்கார்ந்திருந்தாள் சாந்தா! "துளிதேன்! துளிதேன்! என்ற வார்த்தைகள் திரும்பத் திரும்ப அவள் காதுகளில் ரீங்காரம் செய்த வண்ண மிருந்தன.

"துளி தேன் சுவைக்க உதவிய என் காதலர் உயிர் விட்டார்! நான் மட்டும்..." அவள் வாய் அசைவற்று நின்று விட்டது! பெட்டியில் வைத்திருந்த விஷத்தை எடுத்தாள்! விஷத்தைப் பார்த்துக் குறுநகை புரிந்தாள்! அவள் அழகிய முகம் மலர்ந்தது! சுந்தரம் அவளெதிரில் தோன்றிப் புன்னகை புரிந்தான்!

: புலியுள்ளம் :

பெரிய பங்களா! அதைச் சுற்றிலும் அழகிய பூஞ் சோலை! சோலைக்குள் ஒரு புறமாக இருந்த சிறு குடிசை. குடிசைக் கருகே நீர் இறைக்கும் கிணறு. மேகங்களுக்குள் புகுந்து புகுந்து வெளிவந்து வானில் ஒளி வீசும் முழு நிலா.

குடிசைக்குள் ஒரு வாலிபன் படுத்துக் கொண்டிருந் தான். அவன் கண்கள் திறந்து திறந்து மூடின. அவன் படுத்திருந்த கிழிந்த பாயின் அடியிலிருந்து ஒரு சிறிய பையை எடுத்து, அதனுள்ளிருந்த சிறு புகையிலை துண்டை வாயில் போட்டுக் கொண்டான். வாய் மெது வாக அசைந்தது. அவன் கண்கள் குடிசையின் மேல் கூரை வழியாக வானத்தில் பவனி வந்த பால் நிலாவை பார்த்தன! உழைத்து உழைத்து உரமேறிய தன் பெருத் தத் தோள்களைத் தடவிப் பார்த்தான். அவன் கண்களில் ஏக்கம் நிறைந்திருந்தது. அவன் உள்ளம் தன் சிற்றூரை நாடிச் சென்றது.

ஒரு சிறிய குடிசை! குடிசையின் வெளியே ஒரு கயிறு கட்டிலில் வயதான அவன் மாமா படுத்துக்கொண் டிருந்தார். குடிசைக்குள்ளே கிழிந்த ஈச்சம் பாயில் புரண்டு புரண்டு படுத்துக் கொண் டிருந்தாள் பொம்மி.

அவள் கண்களி லிருந்து நீர் வழிந்து கொண்டிருந்தது— இப்படி ஒரு காட்சி அவன் அகக் கண்முன் தோன்றியது. அவன் ஒரு பெரு மூச்சு விட்டு விட்டு எழுந்து உட்கார்ந் தான். சிறிது நேரம் கழித்து குடிசையை விட்டு வெளியே வந்து, கிணற்றின் அருகே உட்கார்ந்துகொண்டு ஏதேதோ யோசித்தான். அவன் சென்னைக்குக் கூலி வேலை செய்ய வருவதற்கு இரண்டு நாட்களுக்கு முன், அவளைச் சந்தித்து தன் முடிவைச் சொன்னதும், அவள் கண்களில் நீர் ததும்பித்தும், தேம்பும் குரலிலே, "நம்ப ஊரிலேயே புழைக்க முடியாதா?" என்று அவள் கூறிய வார்த்தைகள் அவன் காதுகளில் வந்து ஒலித்தன. திரும் பவும் எழுந்து, மெதுவாக நகர்ந்து குடிசைக்குள் சென்று, படுத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் தூங்கியும் விட் டான்.

* * *

வேலு கலக்கமற்ற வாலிபன். கட்டான உடல். உழைக்க உழைக்க சோர்வடையாத உள்ளம். அவன் தந்தை உயிரோடு யிருந்த வரைக்கும் கவலையை அறியாது விளை யாட்டாகவே நாட்களைக்கழித்து வந்தான். தந்தை யிறந்த தும், அவனுக்கிருந்த கால்காணி நிலத்தையும், அடமானம் வைக்கவேண்டிய அளவிற்கு, வறுமை அவன் குடும்பத்தை வாட்டியது!

பொம்மி, அவன் அம்மான் மகள். அவள்மேல் தன் உயிரையே வைத்திருந்தான் வேலு. பொம்மியும் வேலு வைத் தவிர உலகத்தில் வேறொன்றும் உயர்ந்தது அல்ல என்ற எண்ணம் கொண்டிருந்தாள். இருவரும் கல்யாணம் செய்து கொள்வதிலே யாதொரு தடையுமில்லை ஆனால் பணம் இல்லை!

அதற்காகவே சென்னையில் வந்து வேலைசெய்யத் தீர் மானித்தான். ஒரு நாள் மாலை, குடத்தை இடையில் வைத்துக்கொண்டு நீர் யெடுக்கச் சென்ற பொம்மியைச்

சந்தித்து, தன் முடிவைத் தெரிவித்தான். செய்தியை கேட்டதும் சிற்றிடையாள் கண்ணீர் உகுத்தாள்.

"நம்ப ஊரிலேயே புழைக்க முடியாதா ?" கம்மிய குரலிலே அவள் கேட்டாள்!

"பொம்மி என் அழகே! ஒரு வருஷம் பட்டணத்திலே பாடுபட்டா போதும் அப்புறம் அந்தக் கால்காணி நிலத்தையும் மூட்டுக்கலாம். கல்யாணமும் செய்திக்கலாம்."

"அவ்வளவு தொலைவு ஊரிலே போனுதான் சம்பாதிக்க முடியுமா ?"

நமபவூரிலே,நமக்கின்னு ஒரு கால்குழிக்கூட இல்லாமே என்னுதான் மாடுபோல உழைச்சாலும், வயிறு கொஞ்சம் ரொம்புமே தவிர நம்ப தரித்திரம் தீராது!"

"அப்படியின்னு அடிக்கடி வந்து போவிங்கோயில்லே"

"ஒ! மாசத்துக்கு ஒருமுறையாச்சும் நிச்சயமா வரேன்!"

"நிச்சயமா ?"

"சத்தியமா !"

பிறகுதான் வேனு, சென்னையில் வந்து வேலைக்கு அலைந்தான். திவான் பகதூர் ஆறுமுக அய்யர் பங்களாவிலே, தோட்டக்காரன் வேலை கிடைத்தது. அய்யருக்கு வேனுவை ரொம்பவும் பிடித்திருந்தது. ஓயாது வேலை செய்யும் வேனு யார் மனதைத்தான் திருப்தி படுத்த மாட்டான்?

எவ்வளவு நேரம் அவன் வேலை செய்துகொண்டிருந்தாலும், பார்த்துக் கொண்டேதான் இருப்பாரே ஒழிய, "வேனு! சிறிதுநேரம் ஓய்வு எடுத்துக் கொள்ளேன்!" என்று ஒருதடவைகூட அய்யர் சொன்னது கிடையாது.

வேலு உழைக்கத்தான் பிறந்தவனே ஒழிய உட்கார்ந்து ஓய்வெடுக்கப் பிறந்தவனல்ல என்ற நினைப்புக் கொண்ட கல்மன திவான் பகதூர் எப்படி சொல்லுவார் அப்படி?

எவ்வளவுதான் அவன் கஷ்டப்பட்டு வேலே செய்தாலும், அவன் கடமை அது என்று அய்யர் மனம் நினைத்ததே அன்றி சிறிதுகூட அவனுக்காக இளகவே இல்லே அவ்வளவ கடின நெஞ்சம் அவருடையது!

அய்யர் வீட்டில், பெருக்குவதையும் சாமான்களேத் துலக்குவதையும் தவிர மற்ற சகல வேலேகளேயும் வேலு ஒருவனே செய்து வந்தான்.

அதிகாலேயில் எழுந்திருப்பான். கிணற்றிலே நீர் இழுத்து பூஞ்செடிகளுக்கு ஊற்றுவான். செடிகளுக்கு நீர் ஊற்றி முடிப்பதற்கும் சூரியன் உதயமாவதற்கும் சரியாக யிருக்கும். பிறகு பங்களாவுக்குள் சென்று, அய்யரும் அவர்மனேவியும் படுத்திருந்த படுக்கையைச் சுற்றி வைத்துவிட்டு, கட்டில்கள், சோபாக்கள், நாற்காலிகள், மேஜைகள், பீரோக்கள், பெட்டிகள் ஆகியவற்றை நன்ருகத் துடைத்துவிட்டு, தொட்டிகளேக் கழுவி, சுத்தம் செய்து நீர் பிடித்து வைப்பான். அய்யரும் அவர் ஆசை மனேவியும் குளிக்க! அவர்கள் குளிக்கும் நேரத்தில், திவான் பகதூரின் ஒரே குழந்தையை வைத்து விளேயாடிக் கொண்டிருப்பான். பிறகு தென்னே மரமேறி தேங்காய் பறித்துப் போடுவான். காய்களே உறித்து வீட்டினுள் கொண்டு வந்து வைத்துவிட்டு, கடைக்குச் சென்று காய்கறிகள் வாங்கிக்கொண்டு வருவான். சிறிது ஏதாவது பழையது சாப்பிட்டுவிட்டு, விறகு பிளந்து தருவான். மாலே மூன்று மணிக்கு 'ரோல்ஸ் ராய்ஸ்' காரை நன்ருகத் துடைத்துவிட்டு, செடிகளுக்கு நீர் மொண்டு ஊற்றச் செல்வான்– சூரியன் மறையும் வரைக்கும் நீர் ஊற்றும் வேலே சரியாக

இருக்கும். இப்படி ஒவ்வொரு நாளும் இயந்திரம்போல வேலை செய்துகொண் டிருந்தான் வேலு.

அவன் இரத்தம் சுண்டச் சுண்ட உழைத்துக்கொண் டிருந்தான். அதற்காக அய்யர் மனம் அணுவளவும் இரங்க வில்லை! அது அவனது கடமை என்று கருதினார். வேலும் அப்படித்தான் நினைத்துக்கொண்டு பகல் முழுவதும் உழைத்த வண்ண மிருந்தான்.

மாதங்கள் இரண்டு சென்றன. வேலுக்குத் தன் ஊர் சென்று, பொம்மியைப் பார்க்க வேண்டு மென்ற ஆசை வளர்ந்துகொண்டே வந்தது. ஒரு நாள் அய்யரை அணுகி, இரண்டு நாட்களில் ஊருக்குச் சென்று திரும்பி விடுவ தாகக் கூறினான். அய்யர் முகம் சிவந்தது!

"இதற்காகத்தான் இந்தப் பட்டிக் காட்டுப் பயல் களையே வேலையில் வைத்துக் கொள்ள கூடாதென்பது!... ஏண்டா, இப்போதானேடா ஊரிலிருந்து வந்தே, அதுக் குள்ளே ஊருக் கேண்டா?......போ போ! அப்புறம் போகலாம்!"

பேச தைரியமற்றவனாய் வேலு வெறுமனே திரும்பி னான்.

பொம்மியைப் பார்க்க வேண்டு மென்ற அவன் ஆசை நாளுக்குநாள் அதிகரித்துக்கொண்டே சென்றது. சதா காலமும் அவன் உள்ளம் பொம்மியின் குடிசையைச் சுற் றிச் சுற்றி வட்டமிட்ட வண்ண மிருந்தது!

"அப்படியின்னா அடிக்கடி வந்து போவிங்கோ யில்லே!"

"ஓ! மாசத்துக் கொரு முறையாச்சம் நிச்சயமா வரேன்!"

இந்த உரையாடல் அவன் கவனத்திற்கு வந்து அவன் உள்ளத்தை அடிக்கடி வாட்டியது.

உழைத்து உழைத்துச் சுண்டும் தன் இரத்தத்தைக் குடிக்கும் புலியுள்ளம் படைத்தவர் அய்யர் என்ற உண்மையை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை. அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருந்தால் ஒரு நாளைக் கில்லாவிட்டாலும், மற்றொரு நாள் அவர் மனம் இரங்கு மென்று நினைத்தான்.

அனுமதி கேட்பான்! மறுக்கப்படும்! கேட்பான்; திட்டுக் கிடைக்கும்! இது வழக்கமாகி விட்டது.

நான்கு மாதங்கள் பறந்தன! ஓர் இரவு வேலுவின் மனக்கண் முன்பு நீர் வழியும் கண்களோடு பொம்மி தோற்ற மளித்தாள்! "டே வேலு! இந்த மாசம் நகர சபையார் பட்டணத்தில் உள்ள மிகவும் அழகான தோட் டத்திற்குப் பரிசு தரப் போகிறார்கள். நம்ம தோட்டம் எப்படியின்னு முதற் பரிசு தட்டிடனும், தெரியுதா?"

"சரி சாமி! ரெண்டு நாளு......"

"சீ கழுதே! போய் வேலையைக் கவனி!"

அன்று மாலை அய்யருக்கும் அவனுக்கும் நடந்த உரையாடல் அவன் கவனத்திற்கு வந்தது!

"சிறையில் வந்து சிக்கிக் கொண்டோம்!" என் றெண்ணியது அவன் உள்ளம். வேதனையும் ஏக்கமும் அவன் மனதை அழுத்தியது! படுக்கையில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான். கண் இமைகள் கனத்து மூடிக் கொண்டன!

வயல்வெளி! பச்சைப் பசேலென்று பயிர்! ஒரு கழ னியில் பொம்மியும் இன்னும் சில பெண்களும் களை

யெடுத்துக் கொண்டிருந்தார்கள். வானத்தி லிருந்து சூரியன் வெப்பத்தை வெகு வேகமாக வீசிக்கொண்டிருந்தான்.

பொம்மியின் முகத்தில் முத்து முத்தாக வியர்வை அரும்பி, வழிந்தது குனிந்திருந்தவள் நிமிர்ந்தாள். அவள் முகத்தில் ஏக்கம் குடிக்கொண்டிருந்தது. மெதுவாக நடந்து, வரப்புக் கருகே வைத்திருந்த கூழ்ப்பல்லாவை எடுத்துக் கொண்டு கிணற்றை நோக்கி நடந்தாள்.

கிணற்றின் கரையோரம் வந்து சேர்ந்ததும், நாலா பக்கங்களிலும் சுற்றிப் பார்த்து விட்டு உட்கார்ந்தாள். கரையில் உட்கார்ந்த வண்ணம் நீரை எட்டிப் பார்த்தாள். கலக்க மற்றும், அசைவற்றுமிருந்த நீரிலே கன்னியின் உருவம் நன்கு தெரிந்தது. சிறிது நேரம் தன் உருவத்தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள். சிந்திய அவள் கண்ணீர், சிற்றிடையாளின் உருவத்தை ஆடச் செய்தது. எழுந்து நின்றாள்! "ஓ! மாசத்திற் கொரு முறை யாச்சம் நிச்சயமாக வரேன்!" அவள் வாய் இப்படி முணு முணுத்தது. அவள் தலை சுற்றியது. அவள் கண்கள், மேல் இமைகளில் போய்ச் சொருகின! சாய்ந்தாள்! உருண்டு கிணற்றுள்ளே விழுந்தாள்!......

"அய்யோ! பொம்மி! பொம்மி! என்று அலறிக் கொண்டு எழுந்தான் வேலு. தன் கண்களைத் துடைத்துக்கொண்டு இப்படியும் அப்படியும் பார்த்தான். கண்டது கனவுதான் என்பதை அறிந்ததும் ஒரு பெரு மூச்சு விட்டுவிட்டு, படுத்துக்கொண்டான்.

பொழுது புலர்ந்தது. அன்று எந்த வேலையிலும் அவன் நாட்டம் செல்லவில்லை. இரவு கண்ட கனவு. அடிக்கடி அவன் கவனத்திற்கு வந்து அவனை நிலை கலங்கச் செய்தது. வேலையை ஒரு இயந்திரம்போல செய்து

கொண்டே ஏதேதோ யோசனைகளைச் செய்தவண்ணமிருந்தான். எப்படியாகிலும் உடனே சென்று பொம்மியைப் பார்த்துவிட்டு வந்துவிட வேண்டுமென்று தீர்மானித்தான்.

அன்றிரவு யாரிடமும் கூறாமலே 'திருட்டுத்தனமாக' தன் ஊருக்குப் புறப்பட்டு விட்டான்.

மறுநாள் காலை, தன் சிற்றூரை வந்தடைந்தான். பொம்மி கிணற்றில் விழவில்லையே ஒழிய, அவள் உண்மையிலேயே நோய் வாய்ப்பட்டு மிகமிக இளைத்திருந்தாள். வேலு வரவேயில்லை பய என்ற வருத்தத்தால் அவள் உடல் நாளுக்கு நாள் இளைத்துக்கொண்டே வந்தது. ஒரு நாள் மழையிலும் நனைந்து விட்டாள். அவ்வளவுதான், மறுநாளிலிருந்து தலைவலியும் காய்ச்சலும் ஆரம்பமாகி விட்டன! ஒரு வாரமடித்த காய்ச்சலினால், அவள் உடல் உரு மாறிவிட்டது. அந்த நிலைமையில் அவளைக் கண்டதும், வேலு அழுதே விட்டான்!

அவளருகில் எந்நேரமுமிருந்து, அவளுக்கு வேண்டியவற்றைச் செய்துக் கொண்டிருந்தான். அவன் வந்த இரண்டு நாட்களில் எவ்வளவோ அவள் உடல் தேறிவிட்டது.

மூன்றாம நாள் பொம்மி உட்கார ஆரம்பித்தாள். வேலுக்குச் சொல்ல முடியாத மகிழ்ச்சி. பழைய புன்முறுவல் அவள் முகத்தில் சிறிதுசிறிதாக தோன்ற ஆரம்பித்தது.

சூடான பாலை விசிறிக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான் வேலு!

பூட்ஸ் சப்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான். வந்தவர்களைக் கண்டதும், அவன் உள்ளத்

தில் ஒரு அதிர்ச்சி யேற்பட்டது! அவன் கை கால்கள் நடுங்கின. ஏன் உடல் முழுதும்தான் உதற ஆரம் பித்தது!

போலீஸ்கூாரர் இருவர் தன் குடிசைக்குள் வருவதைக் கண்டதும், அவன் இருதயமே வெடித்துவிடும் போலாகி விட்டது.

“நீதானே வேலு?” அதட்டிக் கேட்டான் ஒரு போலீஸ்காரன்.

“ஆமாம் சாமி!” நடு நடுங்கும் குரலில் பதிலளித் தான் வேலு.

“டே! திவான்பகதூர் வீட்டிலே திருடி விட்டு இங்கே ஓடிவந்துவிட்டா, யாராலும் கண்டு பிடிக்க முடி யாதின்னு நினைச்சி பூட்டே?”

“நானு திருடினேனுங்கோ?”

“சே சே! நீங்க திருடி யிருப்பீங்களா?......ஓ! புறப்படு!”

“எங் கைங்கோ?”

“வேறு எங்கே கூப்பிடுவாங்களாம் உங்களை......... போலீஸ் ஸ்டேஷனுக்கு வாடா!”

வேலு ஒன்றுமே புரியாமல் திகைத்தான். “திருடனு? யார்? நானு?” பற்பல கேள்விகளைத் தனக்குத் தானே கேட்டுக் கொண்டான். அவன் உள்ளம் படபட வென்று அடித்துக் கொண்டது. திரும்பி பொம்மியைப் பார்த் தான். அவமானமும், ஏக்கமும் நிறைந்த கண்களோடு அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவன் வாசற் படியில் பெருத்தக் கூட்டம் கூடிவிட்டது. கிராமத்தில் போலீஸ்காரர் வந்தார் என்றால் கூட்டத்திற்கு சொல்லவா வேண்டும் கூட்டத்திற்கு? வேலுவின் உடலை வெட்கமும் அவமானமும் பிடுங்கித் தின்றது.

"சாமி! இவளுக்கு உடம்பு சரியில்லேங்கோ! அப்புறமா வரேனே!"

"அப்புறம் வரிங்களா? சரி, செய்யுங்கோ!......பல்லக்கு அனுப்பி வைக்கிறோம் அதிலே குஷியா ஏறிக்கினி வாங்கோ? சரிதானே!......" என்று நையாண்டிச் செய்தான் இரண்டு போலீஸ்காரர்களில் ஒருவன்.

வேலுவின் கண்களில் நீர் தத்தளித்தது. பொம்மியைப் பார்த்தான், அவள் கன்னங்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது.

"பொம்மி!" என்று கதறிக் கொண்டே அவளருகில் சென்றான். போலீஸ்காரன் அவன் கையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, வெளியே இழுத்துக் கொண்டு சென்றான். மயக்க முற்று கீழே விழுந்தாள் பொம்மி.

வேலுவைச் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்து, திவான் பகதூர் எதிரில் நிற்க வைத்தனர், போலீஸார். அய்யர் போலீஸாரைப் போகச் சொன்னதும், அவர்கள் சென்று விட்டனர்.

அய்யர் கண்களில் தீப்பொறி பறக்க வேலுவை முறைத்துப் பார்த்தார். வேலு குனிந்த தலையை நிமிர்த்திப் பார்த்தான். அவன் உள்ளத்தில் ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது. பொங்கி யாது பயன்? திக்கற்ற ஏழை அவன்! திவான் பகதூர் அவர்! முயல்! புலி!

"சாமி! நானு, திருடினேன்?" உள்ளத்தே எழுந்த ஆத்திரத்தையும் அச்சத்தையும் அடக்கிக் கொண்டு, திடீரென்று இப்படிக் கேட்டான் வேலு.

அய்யர் பதில் கூற வில்லை! அவனைப் பார்த்துச் சிரித்தார்! திரும்பவும் திவான் பகதூர் முகத்தில் கோபம் வெடித்தது?

"டே! ஓடிவிட்டால், விட்டு விடுவேனா? நான் யார் தெரியுமாடா?"

"அதுக்காக வீணா என்மேல்...?"

"சீ கழுதை! வாயை மூடு! உன்யோக்கியதைக்குத் திருடனென்றால் குறைந்து விட்டதா?"

"அப்படியின்னா என்மேல் கேசு......"

"கேசாவது, மண்ணாங்கட்டியாவது! இந்த அய்யர் மனசு வச்சா உன்னைத் திருடனாகவும் செய்யலாம், திருமாலாகவும் பண்ணலாம்! என்னாலே அது முடியுண்டா? ...போடா போய்த் தோட்டத்தைக் கவனி. இன்னும் ஒரே வாரம் தானிருக்குப் பரிசு வாங்க!......" என்று பேசி முடித்து விட்டு அய்யர் சென்று விட்டார்.

வேலு குனிந்த தலை நிமிராமல் தோட்டத்திற்கு வந்தான் ஏழையின் உள்ளத்தில் கோபம் கொழுந்து விட்டெரிந்தது? அய்யருக்கோ அபாரமான செல்வாக்கு, செல்வம் சகலமும் இருந்தன! வேலுவோ அடிமை வேலைக்காரன்! அவன் மனம் வைத்து அவரை யாது செய்ய முடியும்? அய்யர் மனம் வைத்தார், வேலு திருடனானான்! திரும்பவும் மனம் வைத்தார், திருடன் நிரபராதி யானான்! நரியை நாயாகவும், நாயை நரியாகவும் ஆக்கும் ஆற்றல் அய்யரிட மிருந்தது! அவனால் முடியுமா?

ஐந்து நாட்களை வேதனையோடு கழித்தான் வேலு கடைக்குச் சென்று திரும்பி வரும்பொழுது, பங்களாவின் முன் புறத்தில் அவன் ஊரிலிருந்து ஒருவன் வந்து நின்று கொண்டிருப்பதைக் கண்டான். அவனைக் கண்டதும் வேலுவிற்குத் தூக்கி வாரிப் போட்டது! அருகில் வந்ததும், "என்னப்பா சமாசாரம்?" என்றான் வேலு.

வந்திருந்தவன் வருத்தம் மிகுந்த குரலில் "இரவு பொம்மி..........." என்று இழுத்தானே ஒழிய முடிவை கூறவில்லை! பொம்மி இறந்து விட்டாள் என்பதை அறிந்தான் வேலு! சுழலில் சிக்கிய துரும்பைப் போலாயிற்று அவன் நிலைமை! கண்களில் நீர் வழிந்தது.

"வேலு? ஊருக்கு வாப்பா போலாம்! நீ வந்து அப்புறம்தான் எடுக்க வேண்டுமென்று......"

வேலு உள்ளே சென்றான். வாங்கிவந்த சாமான்களைக் கொடுத்து விட்டு, வேகமாய் வெளியே வந்தான்.

"ஏம்பா?"

"அய்யர் வெளியே போயிருக்காரு! இப்போ வந்துடுவாரு! வந்ததும் கேட்டுக்கிட்டு வரேன்!"

சிறிது நேரத்தில் அய்யர் 'ரோல்ஸ் ராய்ஸ்' காரில் வந்து இறங்கினர்.

பய பக்தியோடு வேலு அருகில் சென்று, நின்றான்.

"ஏண்டா?" என்று அதட்டிக்கேட்டார்.

"என் மாமா பெண்ணு........."

"சொல்லுடா! ஏன் தயங்கறே...அடட! அழறியே ஏன்?"

"செத்துப் போச்சுங்கோ!"

"அதுக்காக?"

"ஊருக்கு அழைச்சிட்டு போக ஆள் வந்திருக்கு."

"வேலு, செத்தவளைப் போய் ஏண்டா பாக்கணும்? நீ பாத்தா போன உயிர் திரும்பவும் வந்துடுமா? இன்னும் இரண்டே நாட்கள் தானிருக்குத் தோட்டத்திற்குப் பரிசு வாங்க........"

"சாமி!........."

"போடா! போய் வேலையைக் கவனி! எல்லாம் பிறகு போகலாம்!"

வேலு, மேலும் அவரை வேண்ட விரும்ப வில்லை. பேசாமல் திரும்பிச் சென்று வேலையைக் கவனித்தான்.

"நாம் ஏன் இனி உழைக்க வேண்டும்? அந்தக் கால் காணி நிலம்தான் நமக்கேன்? உயிருக்குயிரான பொம்மியே உயிர்த் துறந்தாள்? இனி உலகில் எதுதான் ஏன்?" இப்படி அவனது வேதனை நிறைந்த உள்ளத்தில் ஏதேதோ எண்ணங்கள் எழுந்தன. அடிக்கடி பொம்மியை நினைந்து நினைந்து கண்ணீர் விட்டான்.

ஒருநாள் நகர சபையார், அய்யரின் தோட்டத்தை வந்து பார்வை யிட்டனர். செழித்து வளர்ந்திருந்த செடிகளையும் அவற்றில் பலப் பல வர்ணங்களிலே பூத்து, அழகையும் மணத்தையும் அள்ளி வீசிக் கொண்டிருந்த மலர்களையும் கண்டனர். மிகவும் அழகாகத் தோட்டமிருப்பதாக அய்யரைப் பாராட்டினர்!

செடிகளின் வளர்ச்சியும், பூக்களின் நிறமும் வேலுவின் இரத்தமும் தசையும் என்ற உண்மை, அவர்கள் நினைவிற்கே வரவில்லை!

தோட்டத்திற்கு முதற் பரிசு தரப் பட்டது. அதற்காக மறுநாள் மாலை ஒரு தேநீர் விழா நடைபெற்றது, அய்யரின் பங்களாவில்.

விழாவிற்குச் சென்னையி லிருந்த பற்பல ரகங்களைச் சேர்ந்த பெரிய மனிதர்கள் வந்திருந்தனர். பாட்டு, நடனம்—ஒரே இன்ப மயமாக யிருந்தது.

ஆடிய அணங்கின் கால்களிலிருந் தெழுந்த சதங்கை யொலியும், இடையிடையே பெரிய மனிதர்கள் உள்ளத்தே பொங்கி வழிந்த இன்பத்தின் மிகுதியினால் கலகல வெனச் சிரித்த, சிரிப்பொலியும், 'வேலுவின் துன்பத்தை இன்னும் அதிகமாக்கின.

நாட்கள் பல நகர்ந்தன! வேலுவிற்கு வாழ்க்கையில் ஏற்பட்ட வெறுப்பினால், மனிதர்களைக் கண்டாலே கோபமும் உண்டாகத் தொடங்கியது.

முன்பெல்லாம், யாராவது பங்களாவிற்கு முன் வந்து "தாயே லக்ஷிமி! ஒரு பிடி சாதம் போடுங் கோ!" என்று கேட்டால், குடிசையில் தன்னிடமிருக்கும் அரிசியில் கொஞ்சம் கொண்டு போய்ப் போடுவது வழக்கம்—அவ்வளவு இளகிய உள்ளம் அவனுக்கு! இப்பொழுதோ யாராவது பிச்சைக்காரர் வந்து கேட்டால், "சீ! போடா சும்மா கூவாதே! கத்தினால் உதைப்பேன்!" என்று அவர்கள் மேல் சீறி விழ ஆரம்பித்தான்.

நாட்கள் செல்ல, செல்ல, சிரித்துக் கொண்டிருப்பவர்களைக் கண்டால், வெட்டி விடலாம் போல அவனுக்குத் தோன்றும், அவனைப் போலவே உலகம் முழுவதும் துக்கத்தில் ஆழ்ந்திருக்க வேண்டுமென்று ஏனோ அவன் உள்ளம் எண்ணியது!

அய்யரின் வீட்டில், எப்பொழுதும் ரேடியோவின் இசை யிருந்து கொண்டே யிருக்கும். அய்யரும் அவர்

மனைவியும் பேச்சுக்குப் பேச்சு, சிரிப்பொலியை எழுப்பிக் கொண்டேயிருப்பார்கள். குழந்தையிடம் சிரித்துக் கொண்டே கொஞ்சுவார்கள். இவற்றை யெல்லாம் கண்ட வேலுவின் உள்ளம், பதை பதைக்கும். இந்தப் பாபியினால் தானே என் பொம்மியிறந்தாள் என்ற பழைய நினைப்பு வரும்.

நாளா வட்டத்தில் வேலுவின் உள்ளம் இரக்கமற்ற இடமாகி விட்டது. அவன் மனத்தில் பழி வாங்கும் எண்ணமும், பிறர் துன்பத்தால் துடி துடிப்பதைக் கண்டு, சாந்தமும், சந்தோஷமும் அடையும் தன்மையும் குடி கொண்டன!

ஒரு நாள் வேலு தென்னை மரத்திலேறி தேங்காய்ப் பறித்துக் கொண்டிருந்தான். ஒரு தேங்காய்ப் பறித்துக் கையில் வைத்துக் கொண்டு, கீழே பார்த்தான். அய்யரின் நான்கு வயது பையன், மான் குட்டியைப் போல் துள்ளி விளையாடிக் கொண்டிருந்தான் தோட்டத்தில்.

தேங்காயைக் கையில் வைத்துக் கொண்டே, குழந்தையை உற்று நோக்கினான். கலக்க மற்ற சிறுவன் பசுவின் கன்றைப் போல ஓடி ஆடி விளையாடிக் கொண்டிருந்தான்.

வேலுவின் கண்கள் சிறிது சிறிதாக சிவக்க ஆரம்பித்தன. அவன் மனதில் புயலைப் போல பல எண்ணங்கள் தலை விரித்தாடின!

"சரி! அதுதான் சரி!' என்று தனக்குத் தானே கூறிக் கொண்டான்.

தேங்காயைக் கீழே போட்டு விட்டு சர சரவென கீழே யிறங்கினான். சுற்றும் முற்றும் பார்த்தான். யாரும் அவன் கண்களுக்குப் புலப்படவில்லை, குழந்தையைத் தவிர! குழந்தையின் அருகே சென்றான். அவன் கை கால்கள் உதறின. அவன் உள்ளம் படபடவென அடித்

தக் கொண்டது. சிறிது நேரத்தில், ஏதோ இழந்த உறுதியைத் திரும்பப் பெற்றவனைப் போல காணப்பட்டான். திருப்பவும் நாலா பக்கங்களிலும் ஒரு முறை பார்த்தான். யாரும் தென்படவில்லை!

குழந்தையைத் தூக்கிக் கொண்டான். மெதுவாக நடந்தான். கிணற்றின் அருகே வந்து நின்றான்! குழந்தையின் முகத்தைப் பார்த்தான். அவனைப் பார்த்து, தன் முல்லைப் பற்களில் ஒளி வீச குழந்தை சிரித்தான். சிரிப்பைக் கண்டதும் வேலுவின் முகம் விகார மடைந்தது. பொம்மியை உன் அப்பன் தானே கொன்றான்?!' என்று அக் குழந்தையைக் கேட்பது போல காணப்பட்டது அவனது பார்வை! காற்று சிறிது பலமாக வீசியது. செடிகள் இலைகளை அடித்துக் கொண்டு "அய்யோ! அய்யோ?" என்று கதறுவதைப் போல சப்தம் செய்தன!..

மிரள மிரள வேலு தன் தலையைத் திருப்பி எல்லா பக்கங்களிலும் பார்த்தான்! "அய்யோ அய்யோ!" என்று செடிகள் கதறின.

வேலு குழந்தையைக் கிணற்றில் போட்டு விட்டு, விரைந்தோடி, தென்னை மரத்தில் ஏறினான்! மரத்தின் சிறிது உயர மேறிக்கொண்டு, "சாமி! சாமி!" என்று கத்தினான்.

பங்களாவின் உள்ளிருந்து அய்யர் சாந்தமாக, மெதுவாக வெளியே வந்தார்.

சாமி! குழந்தை கிணற்றிலே..." என்று கதறிவிட்டு, வேகமாகக் கீழேயிறங்கினான். அய்யர் அலறினார் அவர் மனைவியும் ஓடி வந்தாள்! எல்லோரும் கிணற்றை நோக்கி ஓடினார்கள்.

வேலு கிணற்றில் குதித்தான். உள்ளே மூழ்கினான். உள்ளே சென்ற குழந்தை வெளியே வந்து கொண்டிருந்

தது. குழந்தையை நீரினுள்ளேயே வேலு பிடித்துக் கொண்டான். வெளியே வருவதற்குப் பதிலாக கிணற்றில் கரையை நோக்கியே சென்றான். குழந்தையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, வேலு மூச்சுதிணறு மளவிற்கு உள்ளேயே யிருந்து விட்டு, பிறகு வேகமாக வெளியே வர ஆரம்பித்தான்.

தாரை தாரையாக நீர் சிந்தும் கண்களோடு, அய்யரும், அவர் மனைவியும் கிணற்றினுள்ளேயே கண் சிமிட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

வேலு வெளியே வந்தான். வேலுவின் கையில் குழந்தை இருந்தது. ஆனால் குழந்தையின் உடலில் உயிரில்லை! குழந்தை பிணமானதைக் கண்டதும் கோவென பெற்றோர் கதறினர். பிணமான தம் ஒரே மகனை, குலக் கொழுந்தை, சிறு பாலகனை, சேர்த்து அணைத்துக் கொண்டு அலறி அழுதார்கள்!

துள்ளி விளையாடிக் கொண்டிருந்த பச்சைக் குழந்தையைப் பிணமாக்கிய கல்நெஞ்சனின் கண்கள் சிறிது கூட கலங்கவே யில்லை.

"பொம்மி செத்தாளே, நான் அழுதேனே, அதைக் கண்டு சிறிதாவது இவர்கள் மனம் இளகியதா? அழட்டும்! நன்றாக அழட்டும்." என்று எண்ணியது அவன் புலியுள்ளம்.

அன்று முதல் திவான் பகதூர் வீட்டில் அழுகுரல் ஓயாமல் கேட்டுக் கொண்டிருந்தது. அழுகுரல் வேலுக்கு சாந்தத்தையும், சில நேரங்களில் மகிழ்ச்சியையும் கொடுத்தது.

வேலு, இளகிய உள்ளத்தவன், பொம்மி சாவதற்கு முன்பு. அப்பொழுது அப்பரின் உள்ளம், பிறர் வருத்தத்தைக் கண்டு கரையாத புலியுள்ளம்!

பொம்மி இறந்ததற்குப்பிறகு, இறக்கமற்ற கல்மனத்தவனானன் வேலு. தனக்கொரு தவறும் செய்யாத குழந்தையைக் கொல்லு மளவிற்கு அவன் உள்ளம் இரத்த வெறி பிடித்து விட்டது!

சாது உள்ளம், புலியுள்ளமாக்கப்பட்டது பிறரால்! திவான் பகதூரின் இரக்கமற்ற உள்ளம், பிறர் துன்பத்தை உணராத உள்ளம், பிறர் உழைப்பையும், இரத்தத்தையும் குடிக்கக் குடிக்க, திருப்தி ஏற்படாத புலியுள்ளம், வேறொரு புலியுள்ளத்தை முடிவு உண்டாக்கி விட்டது!

: துரோகம் :

குளிர்ந்த தென்றல்! மாலைநேரம்! சோலைக்குயிலின் இனிய கீதம்! நறுமணம் வீசும் நந்தவனம்! கொடிபோன்ற அவளின் சிற்றிடை அசைய, கோகிலா உலவிக்கொண்டிருந்தாள்! முழுமதி போன்ற அவள் முகத்தாமரை, கவலையில் மூழ்கியிருந்தது. மினு மினுத்த கன்னங்களில் முத்து முத்தாகக் கண்ணீர் வழிந்துகொண்டிருந்தன.

நடந்துசென்ற நங்கை முல்லைப்புதரருகே அமர்ந்தாள். மாலையின் இன்பக் காட்சிகள் அவளின்மனதில் மங்கிக்கிடந்த துக்கத்தைத் தூண்டிவிட்டது.

யாரோ தன் தோளின்மேல் கைவைப்பதை உணர்ந்து திடுக்கிட்டாள்! திரும்பிப் பார்த்தாள்! கண்களைத் துடைத்துக் கொண்டாள்! வாடிய தன் வதனத்தில் ஓர் புன்னகையை வரவழைத்துக்கொண்டாள்! 'வாருங்கள் ஆனந்தம்' என்றாள் சிறிது கலங்கிய குரலிலே!

அம்புபோன்ற கண்களில் அரும்பியிருந்தநீர்த்திவலைகளைக் கண்டான். அரும்புபோன்ற பற்கள் வெளித்தெரிய சிறுநகைபுரிந்து 'வாருங்கள் ஆனந்தம்' என்று வனிதை கூறியதையும் கேட்டான். தங்கநிறத்தளிர் மேனியாளைத் தடவிக் கொடுத்துக்கொண்டே கூறினான்.

"கோகிலா! நானும் கேள்விப்பட்டேன், உன் தாயார் இறந்து இருபது நாட்களாகிறதென்று. என்ன செய்வது வருந்தினால்........."

'வரப்போவதுதானில்லை. ஆனால் மனம் கேட்கிறதா,' என்று கூறித் தேன்மொழியாள் தேம்பித்தேம்பி அழுதாள்.

"அன்னையற்ற அணங்கு வேலியற்ற பயிர்தானே, ஆனந்தம்!"

"வேலி நானிருக்க, வேதனை ஏன் உனக்கு! கண்ணல்ல! அழாதே கோகிலா—என்று கொஞ்சும் குரலில் கூறி, கோகிலாவின் கோவைக்கனி இதழ்களில் ஆழ்ந்த முத்தமொன்று தந்தான்.

அழுபவளுக்கு ஆதரவு கூறுவதைப் போல் அவனுடைய அகலமான மார்பில் அவளை அணைத்துக்கொண்டான்! ஆ! ஆ! அந்த அணைப்பிற்குத்தான் என்ன அபூர்வமான ஆற்றலிருக்கிறது; துன்ப உலகில் துடி துடித்துக் கொண்டிருந்தவளை, இன்பபுரிக்கல்லவா இழுத்துச் சென்று விட்டது.

வருத்தத்தால் வாடியிருந்த கோகிலத்தின் இருதயம், ஆனந்தத்தின் இருதயச் சேர்க்கையால் அலர்ந்தது! அவளின் மதிமுகம் மலர்ந்தது!

* * *

கண்களுக்குக் குளிர்ந்த இன்பக்காட்சியினையும், கருத்துக்குக் களிப்பினையும் அளிப்பதிலே நிகரற்று விளங்குவது காகனம் என்ற சிற்றூர். அந்த ஊரிலே ஓர் பெருத்த செல்வந்தரின் செல்வக்குமாரன் ஆனந்தம்.

அந்தக்கிராமத்திலே ஆனந்தத்தின்தகப்பனார் இட்டதுதான் பிச்சை! அவரின் வாக்குத்தான் சட்டம்! பரம்

பரையான பணக்காரக் குடும்பம்! அதனாலே துன்பத்தின் நிழல் கூட ஆனந்தத்தின்மேல்விழ நியாயமில்லை!

கோகிலாவின் குடும்பமோ ஏழ்மை ஆற்றிலே தத்தளித்து ஓடும் படகு! அவளின் தகப்பனான வேலனின் சொத்து, அவளின் வீட்டருகே இருந்த ஓர் பூந் தோட்டம்தான்.

அன்றாடம் மலர்ந்த மலர்களை அழகாகத்தொடுத்து, அலைந்து சுற்றி, ஆடலழகிகளிடம் விற்று, விற்ற தொகையைக்கொண்டு அந்ததினத்தைக் கழித்து வந்தாள்.

கோகிலாவின் தகப்பனாருக்கும் தாயாருக்கும் தொடர்யேற்பட்டதே ஒரு தனிக்கதை.

அவளின் தாயார் முத்தம்மாளுக்கு இளம் வயதிலே திருமணமாகித், தன் பனிரெண்டாம் வயதிலேயே, விதவையாகிவிட்டாள். விதவையாயிற்றே நாம் வளர்ந்து யாருக்கு இன்பமளிக்கப்போகிறோம் என்று எண்ணாமலே, நாட்கள் செல்லச்செல்ல நங்கையின், தங்கஉடலின் இளமையின் திரட்சியும், முகப்பொலிவும், வளர்பிறையைப் போல வளர்ந்து கொண்டே சென்றது!

கட்டுக்கடங்கா எழில்மிக்க அவளின் சரீரத்தையும்? கலக்கமற்ற அவளின் முகத்தையும் கண்டு, வேலன் தன் நிலை கலங்கியதில் ஆச்சரியமொன்றுமில்லை. அவளின் கருவிழிப் பார்வையில் கட்டுண்டான். ஆசை அனல் அவளை அவதிப்படுத்திற்று. துணிந்து ஓர் நாள்! 'முத்தம், என்னைக் கல்யாணம் செய்துகொள்ளச்சம்மதமா?' என்று கேட்டுவிட்டான். அநேக நாள் ஆசை; அது வளர்ந்தால், ஆலோசனையே அவசியமின்றி, முத்தம் 'சித்தம்' என்றாள்! பலத்த எதிர்ப்பிற்கிடையே அவளை மனைவியாக ஏற்றுக்கொண்டான். காதலின் உயர்வை அறியாத அவளின் உறவினர், அவளைத்தம் இனத்தினின்றும் தள்ளி வைத்தனர்.

அவர்களின் இன்ப வாழ்க்கையில், அரும்பி, மலர்ந்து, காய்த்துக் கனிந்தவள் கோகிலா!

கோகிலாவும் ஆனந்தமும் இளவயதிலே, அந்த நந்த வனத்திலே ஆடிப்பாடி ஆனந்தமடைவார்கள். ஆனந்தத்திற்கு நறுமணம் கமழும் அழகிய மலர்கள் நிறைந்த அந்த மலர்ச்சோலையையும், மான்போல் துள்ளிக் குதித்தாடும் கோகிலாவையும் விட்டுப் பிரியவே மனமிருக்காது.

தன்னூரில் படிப்பு முடிந்ததும் மேல் படிப்பிற்காகத் திருச்சி சென்றான். அறிவிற்கு விருந்தளிக்கச் சென்றவிடத்திலும் அடிக்கடி தன்னூர்க் கவனம்வரும். உடனே அவனுடைய அன்பைக் கவர்ந்த இன்பக் களஞ்சியமான கோகிலா, முகம் காட்டி முறுவல் புரிவதைப் போலத் தோன்றும் உடனே கன்னியின் கவனம் கனவாய் எரிக்கும்.

ஒவ்வோர் விடுமுறைக்கும் அவன் தன்னூர் வருவது வழக்கம். அது போல் கல்லூரிப் படிப்பு முடிந்து, கடைசி விடுமுறைக்குத் தன்னூர் வந்தான்.

கோகிலாவுடன் கோலாகலமாகக் கொஞ்சி விளையாடலாமென்ற காரணத்தால், ஆனந்தம் ஆனந்தத்துடனே தான் தன்னூர் வந்தான். கிராமம் வந்ததும் கிளிமொழியாளின் அன்பு அன்னை இறந்தாளென்ற செய்தி அவனுடைய மனதை வாட்டியது

ஆறுதல் கூற அவன், அணங்கைத் தேடி அடைந்தான், அழகிய மலர்கள் பூத்துக் குலுங்கும் பூந்தோட்டத்திற்கு.

*   *   *

பல நாட்கள் பறந்துவிட்டன! கோகிலா தன் இனிய குரலால் கீதமிசைத்துக் கொண்டே, மருக்கொழுந்து கொய்து கொண்டிருந்தாள். எதிர்பாராத விதமாகக் கதிர

வன் கடுமையாகக் காயும்பொழுதே ஆனந்தம் அங்கு வந்தான்.

கோகிலா தன் கொஞ்சும் அமுத மொழியால் வரவேற்ருள் தேன் தேடிக்குடிக்கவரும் வண்டுகளின் ரீங்காரம் ஒரு தனிப்பட்ட இன்பத்தை தந்தது அந்நேரத்தில்.

தாழ்ந்து தரையை முத்தமிட்டுக்கொண்டிருந்த ஒரு புன்னை மரக்கிளையின் மீது உட்கார்ந்தார்கள்.

வெயிலில் வந்த காரணத்தால் அவன் முகத்தில் முத்துமுத்தாக வியர்வை அரும்ப ஆரம்பித்தது. தன் மலர்க்கைகளால் மங்கை அவன் வியர்வையைத் துடைத்தாள்.

அவள் சரீரமே ஒரு புதுமேனியுடன் திகழ்ந்தது! அவளின் உதடுகளில் மோகனப் புன்னகை! கண்களில் ஆனந்த ஒளி! குரலில் குயிலின் ஒலி! விழியில் மானின் சாயல்!

மலர்ச் சோலையின் மணமும், மனதை மகிழ்விக்கும் மங்கையின் மொழிகளும் ஆனந்தத்தின் நொந்தமனதை மேலும் புண்படுத்திற்று!

அகத்திலே மோதும் துன்ப அலைகளின் சாயல், அவன் முகத்தடியில் தெற்றெனப் புலப்பட்டது. கோகிலா கொஞ்சுவதைக் குறைத்துக் கொண்டு, வருத்தத்தின் காரணத்தை வாய்விட்டுச் சொன்னால்தானே தனக்குத் தெரியுமென்று கெஞ்சினாள்.

"கண்ணே கோகிலா! என்னை மன்னிப்பாய். எப்படி, மன்னிப்பாய் நடந்திருப்பதைக்கூற நா நடுங்கிறதே!'

"நன்ருயிருக்கிறது! மணாளன், மனைவியை மன்னிக்கும்படி மன்ருடுவதா! என்ன குற்றம் அப்படிச் செய்துவிட்டீர்? சரி! சரி! போங்கள் ஆனந்தம்! விளையாடாதீர்!"

"உன் பாகுமொழி கேட்டாலே என் உள்ளம் பதை பதைக்கிதே! உத்தமி, உண்மையாகவே உரைக்கின்றேன்! நம் காதல் சித்திரக்கோட்டையின்மேல் பேரிடி விழுந்து விட்டது!"

"கண்ணு! கண்டதை எல்லாம் கழறி என்னைக்கலங்க வைக்காதீர்!"

"நினைத்தாலும் நெஞ்சம் கொதிக்கிறதே. ஊராரை யும் உற்றாரையும் கலந்து என் பெற்றோர்கள், என்னை ஒரு பேச்சும் கேட்காமலே, வேறோர் இடத்தில் எனக்குப் பெண் பார்த்து நிச்சயித்து விட்டார்கள். என் பெற்றோர் கள் மடைமையாக நடந்திருந்தாலும், அவர்களின் உள்ளம் புண்படாமல் நடப்பது என் கடமை, ஆதலால் எனக்கு இன்பத்தின் உடைமை யாகிய உன்னை இழக்கவேண்டி நேரிட்டுவிட்டது!! என்று கூறும்போதே வெண்மதி போன்ற அவன் முகம், பிணத்தின் முகத்தைப் போலப் பொலிவிழந்து விட்டது. அவளின் தலை சுழன்றது! தன் னைச் சமாளித்துக்கொண்டு அவனை மிரள மிரளப் பார்த் தாள்! சிறிது நேரத்தில் இழந்த உணர்ச்சியைத் திரும்பப் பெற்றாள்! சிறுகாற்று வீச, மொட்டவிழ்ந்து மணம் வீசிய மகிழம் பூக்கள் மண்ணில் உதிர்ந்தன! புன்னையை விட்டுப் பூவை எழுந்தாள்!

'ஆனந்தம்! என்நிலை தெரிந்தும் இப்படிக் கூறலாமா? நான் கர்ப்பிணி, ஆனந்தம்!'

"என்ன? என்ன??......"

'ஆம்! ஆசைகாட்டி என்னை அனுதை ஆக்கினீரே! காதல் காதலென்று என் கருத்தைக்கெடுத்துக் கைவிட்டீ ரே! ஏன் அலற மாட்டீர்! என்று கண்களில் தீப் பொறி பறக்கக் கூறினாள்! அவள் உதடுகள் படபடத்தன!

* * *

இரவு! சிறு குடிசை! விழிகளினின்றும் வழியும் கண்ணீருடன், ஒரு சிறு விளக்கின் முன் கோகிலா உட்கார்ந்து கொண்டிருந்தாள். மாலை மாலையாகக் கசியும் கண்ணீர் மங்கிய ஒளியில் பிரகாசித்தது.

யாரோவரும் காலடிச்சப்தம் கேட்டுக்கோகிலா திடுக்கிட்டுத் - திரும்பிப்பார்த்தாள். வந்தவரைக்கண்டதும், வர்ணிக்கயியலா வியப்பும் கிலியும் கொண்டாள்.

வனிதையின் அருகே வயோதிகர் வந்ததும் "குழந்தாய் கோகிலா" என்று அன்பு அலர்ந்த குரலிலே அழைத்தார். அவளெழுந்து அருகிலிருந்த கயிற்றுக் கட்டிலைக் காட்டி அதில் அவரை அமரும்படி சொன்னாள்.

ஆனந்தத்தின் தகப்பனார் இந்நேரத்தில் இங்கு வருவானேன் 'ஒருகால், துன்பப் பள்ளத்தில் துடி துடிக்கும் நம்மைத் தூக்கிவிட வந்துள்ளாரோ என்று எண்ணிற்று அவளின் உலகமறியாப்பேதை உள்ளம்.

"கோகிலா! கொஞ்சம் கவனமாய்க் கேட்க வேண்டும் நான் கூறுவதை. குழந்தாய்! உன்னால் எனக்கு ஒரு பெருத்த உதவிவேண்டும்! மலர்ந்த மலரின் மண மென எங்கும் வீசும் என் குடும்பத்தின் பெருமையை நீதான் காப்பாற்றித் தர வேண்டும். நான் நாளை மனிதனாக வெளியே தலை காட்ட வேண்டுமானால் நீதான் என்னை இப்போது இரட்சிக்கவேண்டும்!"

'நீங்கள் ஏதேதோ கூறுகின்றீர், எனக்கு ஒன்றுமே விளங்கவில்லையே. ஏழை நான் தங்களுக்கு எந்த விதத்தில் உதவ முடியும்!

"இப்போது ஏழைதான் நீ சொல்படி நடந்தால் சொத்துக்காரி ஆவாய்! தனம் பெரிதல்ல, உன் தயை தான் பெரிது கோகிலா!"

கூறுங்கள் கூற வந்ததை! என் அன்பையும் அவசிய மாயின் என் ஆவியையும் தங்கள் குடும்பத்தின் நலனுக்கு வேண்டின் அர்ப்பணிக்கச் சித்தம்!'

"அம்மா,' ஆனந்தத்தின் தங்கை சரசா சென்னையில் படித்துக் கொண்டிருந்தாளல்லவா? அவளுடன் படித்துக் கொண்டிருந்த ஒருவன் அன்பே! ஆருயிரே! இன்பமே! மானே! மயிலே! என்று வஞ்சக எண்ணம் கொண்டு வர்ணித்திருப்பான். அவனின் வாலிபம், அவனின் விருப்பத்திற்கு விருந்தாயிற்று. கருவுற்றாள்! உடனே அவள் ஹாஸ்டலைவிட்டு வெளிச்சென்றுவிட்டாளாம். பலகடிதங்களெழுதியும் பதிலில்லை!'

"சென்னைக்குச் சென்றேன்! செய்தியைத்தெரிந்தேன்! சித்தம் சோர்ந்தேன்! கருவுற்ற கன்னியைப் பிறர் கண்ணில் படாமல் இருட்டின இரவில் அழைத்து வந்தேன். இன்று பிரசவ வேதனைப்படுகிறாள்........."

'அதற்கு நானென்ன செய்யட்டும்!'

"பொறுத்துக்கேள் பூவாய்! பெரிய இடத்தில் அவளைக் கொடுக்க ஏற்பாடு செய்துவிட்டேன் ஊர் சிரிக்குமே உண்மை வெளியானால்! ஆனந்தத்தின் கல்யாணமும் நின்றுவிடும். என் இதயத் துடிப்பும் தூங்கிவிடும்!...... சரசாவின் சிசுவை நீ வளர்த்துக்கொண்டுவா. வேண்டிய பொருளுதவி செய்கிறேன். கோகிலா, உன்மனம் சிறிது இரங்கினால் என் மனத்திலேயிருக்கும் பெருத்தபாரம் நீங்கும்" என்று கூறிவிட்டு யாதுபதில் கூறுவாளோ என்று அவளின் முகத்தையே கண்ணிமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தார்.

ஆ! பணந்தானே உலகிலே நடக்கும் ஊழல்களை மூடும் திரை! விபசாரியின் வயிற்றிலுதித்தவனிதை என்ற

காரணத்தினாலும், தானே துணிச்சலுடன் இவ்வார்த்தைகளை என்னிடம் கூறுகிறார்! என்று பொங்கிய கோபத்துடன் யோசித்தாள் கோகிலா.

'நம் வாழ்க்கைதான்கெட்டது, பாவம் சரசாவின் வாழ்க்கையும் கெட வேண்டுமா? என்சிறிய உதவியினால் கற்புக்கரசி என்று கணவன் கருதும் படிக்கும், உத்தமி என்று உற்றாரும், ஊராரும் உரைக்கும் படிக்கும் சரசா சாமர்த்திய மாகவும், சாகசத்துடனும் நடந்து கொள்வாள், என்ன இருந்தாலும் எழுதப்படிக்கத்தெரிந்தவளல்லவா? என்று நினைத்தாள்.

தன்நலத்தை விடப், பிறர் நலத்தில்தானே ஏழைகளுக்கு எப்பொழுதும் கண்ணும் கருத்தும்! அது தானே அவர்களின் கீழ் நிலைக்கும் காரணம்!

சாந்தமான குரலிலே 'சரி' என்றாள் !!

குளிர்ந்த நிலவொளி வீசும் குதூகல நேரம்! வீட்டின் முற்றத்தில் கோகிலா மழலை மொழிசிந்தும், தளிர் போன்ற, இருகுழந்தைகளுடன் கொஞ்சிக்கொண்டிருந்தாள்.

பால் நிலவில் பரவசமாய் உலவிவர அந்தவழியாக ஆனந்தமும் அவனுடைய மனைவியும், சரசாவும் அவளுடைய அன்பு! கணவனும் சென்றார்கள்.

"தங்க விக்கிரகம் போன்ற குழந்தைகள் தத்தித் தத்தித் தள்ளாடித் தள்ளாடி நடப்பதைப்பார்க்க எவ்வளவு இன்பமாயிருக்கிறது!" என்றாள் புன்னகையுடன் ஆனந்தத்தின் மனைவி. ஆனந்தம் தலை குனிந்து கொண்டான், அவன் கண்களிலிருந்து சொட்டுச்சொட்டாக கண்ணீர் தரையில் சிந்தியது!

"சரசா! உனக்கு வேண்டாமா இம் மாதிரிகுழந்தை!" என்று ஒரு குழந்தையைச்சுட்டிக்காட்டி இரகசியமாக, நகைத்துக்கொண்டே கூறினான், சரசாவின் நாயகன். இதைக்கேட்ட சரசாவின் இதயம் வெடித்து விடும் போலாகிவிட்டது! அவள் கன்னங்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வழிந்தது.

